SC.No. 138/18
PW – 12
10.03.2026
பெயர் : சமரசம்
த/பெ. : பாலசுப்பிரமணியன்

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

14.06.2013 தேதியில் ஆலங்குடி காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக உதவி ஆய்வாளர் கீதா என்பவர் இருந்தார். அவர் 14.06.2013 தேதியில் 22.00 மணிக்கு என்னிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தார். வழக்கு கோப்பை பெற்றுவிட்டு சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்தில் பார்வை மகஜர் சாட்சிகளை தவிர்த்து வேறு சாட்சிகள் இல்லை. பார்வை மகஜர் சாட்சிகள் தங்களுடைய வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் இருந்ததாக என்னிடம் கூறவில்லை. சம்பவ இடத்தில் ரத்தக்கறை இருந்ததாக பார்வை மகஜர் சாட்சிகள் என்னிடம் கூறவில்லை. சம்பவ இடத்தில் எதிரிகள் மற்றும் புகார்தாரரின் வீடு மட்டுமே உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் ரத்தம்பட்ட மண் இருந்ததாக என்னுடைய மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் வேப்பமரமோ, மாட்டு கொட்டகையோ இருந்ததாக எனது வரைபடத்தில் குறிப்பிடவில்லை. மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நடைபாதை தவிர்த்து அங்கு வேறு பிரதான சாலை எதுவும் இல்லை. சாட்சி சிதம்பரம் எனது வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் மின்விளக்குகள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கும் அருகில் உள்ள கருவக்காட்டிற்கும் இடையில் சுமார் 100 அடி தூரம் இருக்கும். அது நடைபாதையை ஒட்டி உள்ளது. மெயின்தெருவிற்கும் நான் மாதிரிவரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நடைபாதைக்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்திலிருந்து ரத்தம் படிந்த மண் எதையும் நான் கைப்பற்றவில்லை. சம்பவ இடத்தில் இரவு 11.30 மணியளவில் சாட்சிகளை விசாரித்தேன். சாட்சிகள் செல்வம், வீரம்மாள், சித்திரைகண்ணு, ரத்தினம், மாரிக்கண்ணு, தினேஷ், நாடிமுத்து, ராஜா, சிதம்பரம் ஆகியோர்களை சம்பவ

இடத்தை பார்வையிட்ட பிறகு விசாரித்தேன். சாட்சி வீரம்மாள் நான் விசாரிக்க சென்ற சமயத்தில் மயக்கமாக இல்லை. எதிரிகள் குடும்பத்திற்கும் புகார்தாரர் குடும்பத்திற்கும் நடைபாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்ததாக எனது விசாரணையிலல் தெரியவந்தது. அது சம்மந்தமாக நான் வருவாய் துறை அலுவலர்கள் யாரையும் விசாரிக்கவில்லை. நடைபாதை சம்மந்தமாக சிவில் வழக்கு எதுவும் இருந்ததாக நான் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் சைக்கிள் எதுவும் இல்லை. சம்பவஇட சாட்சிகள் எவரும் சாட்சி தினேஷ் சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, சாட்சி சித்திரை கண்ணுவுடன் வந்ததாகவோ, புகாரிலும் எனது விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து அரிவாளுடன் ஓடிவிட்டதாக சம்பவ இட சாட்சிகள் என்னிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர். எதிரிகளை கைது செய்ததாக சொல்லும் இடம் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் இருந்த கடைக்காரர்களை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. அந்த நபர்களை விசாரிக்காததற்கு காரணங்கள் எதுவும் இல்லை. சம்பவ சாட்சிகள் என்னுடைய வாக்குமூலத்தில் எதிரிகள் அரிவாளை தூக்கி போட்டுவிட்டு ஓடியதாக வாக்குமூலம் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் சாட்சி வீரம்மாள் ஆகியோர்களிடம் இருந்து ரத்தக்கறை படிந்த ஆடை எதையும் நான் கைப்பற்றவில்லை. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் நான் தயார் செய்யவில்லை. காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றதாக சாட்சிகள் எவரும் என்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை. அசா.1-னின் தந்தை சுந்தரம் என்பவரை நான் விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை, எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம், கைது அறிக்கை, அனைத்தும் ஆலங்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு 15.06.2013 தேதியில் அனுப்பிவைக்கப்பட்டது என்று சொன்னால் முதல் தகவல் அறிக்கை மட்டும் நான் அன்றைய தேதியில் அனுப்பவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்று சொன்னாலும், அங்கு வைத்து பார்வைமகஜர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னாலும் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்று சொன்னாலும் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக கொடுககப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின்பேரில் முறையான புலன் விசாரணை நான் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னாலும் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>அரசுத்தரப்பில் மறுவிசாரணை</u>

15.06.2013 தேதியில் எதிரி ரவிக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்று பொருட்களை கைப்பற்றினேன்.

Sd/- சமரசம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/- திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.